செ.வெ.எண்:23 நாள்: 13.11.2018

**நாகப்பட்டினம் மாவட்டம்**

**வங்காள விரிகுடா பகுதியில் “கஜா” புயல் உருவாகி உள்ளதையொட்டி மீன்பிடிக்க கடலுக்குச் சென்ற மீனவர்கள் பத்திரமாக கரை திரும்ப மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. செய்தியாளர் சந்திப்பின் போது**

**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப அவர்கள் தகவல்**

வங்காள விரிகுடா பகுதியில் உருவாகி உள்ள “கஜா” புயலையொட்டி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப அவர்களுடன் செய்தியாளர்கள் சந்திப்பு இன்று (13.11.2018) நடைபெற்றது.

இந்த செய்தியாளர் சந்திப்பின் போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,

“ “கஜா” புயல் நகர்ந்து வருவதையொட்டி, வானிலை மையம் எச்சரிக்கையின்படி கண்காணித்து அனைத்து துறை அலுவலர்களும் கள அளவில் ஆய்வு செய்து எந்த ஒரு சூழலையும் சமாளித்திட தயார் நிலையில் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் கடலுக்கு சென்றுள்ள மீனவர்கள் உடனடியாக கரைக்கு திரும்ப மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீனவ கிராமங்களுக்கு உரிய வானிலை அறிவிப்புகள் அவ்வப்போது வழங்கப்பட்டு வருகிறது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் பொது மக்களை தங்க வைக்க் 9 பல்நோக்கு பேரிடர் மையங்களும் 22 புயல் பாதுகாப்பு மையங்களும், பள்ளிகள். கல்லூரிகள். சமுதாய கூடங்கள். திருமண மண்டபங்கள் உள்ளிட்ட 627 பொது கட்டிடங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. அம்மையங்களில் பொதுமக்கள் தங்க தேவையான உணவு குடிநீர் உள்ளிட்ட அனைத்து ஏற்பாடுகளையும் செய்திட துணை ஆட்சியர் நிலையிலான மண்டல அலுவலர்கள் மற்றும் வட்டாட்சியர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மாவட்டத்தில் 14 நிலையான மருத்துவ குழுக்களும் 19 நகரும் மருத்துவ குழுக்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. மாவட்டத்தில் 653 பெண் முதல்நிலை பொறுப்பாளர்கள் உள்ளிட்ட 4454 முதல்நிலை பொறுப்பாளர்கள் தயார் நிலையில் உள்ளனர். அதுமட்டுமின்றி கால்நடைகளுக்காக 2020 முதல்நிலை பொறுப்பாளர்களும் கால்நடைகளுக்கான 28 மருத்துவ குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் கால்நடைகளை பாதுகாப்பாக தங்க வைக்க 212 மையங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

தீயணைப்புத்துறை மூலம் தலா 10 நபர்கள் உள்ளடக்கிய 9 குழுக்களும், காவல் துறையில் மாநில பேரிடர் பயிற்சி பெற்ற காவலர்கள் தலா 10 நபர்கள் வீதம் 8 குழுக்களும் தயார் நிலையில் உள்ளனர். தமிழ்நாடு மின்சார வாரியம் மூலம் 6000 மின்கம்பங்களும். மீன்வளத்துறை மூலம் 54 படகுகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமின்றி 1,19,830 மணல் மூட்டைகளும், 56 மரம் அறுக்கும் எந்திரம் 88 ஜெ.சி.பி இயந்திரங்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் அவசரகால பாதுகாப்பு மற்றும் மீட்பு நடவடிக்கைளை மேற்கொள்ள ஏதுவாக தேசிய பேரிடர் மேலாண்மை படையிலிருந்து சிறப்பு பயிற்சி பெற்ற 75 வீரர்கள் 3 குழுக்களாக மீட்புப் பணிக்குத் தேவையான நவீன உபகரணங்களுடன் வருகை தந்துள்ளார்கள். இவர்கள் எத்தகைய பேரிடரையும் சமாளித்து மீட்பு மற்றும் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ளும் வகையில் சிறப்பு பயிற்சி பெற்றவர்கள்.

மேலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் இயங்க கூடிய கட்டுப்பாட்டு அறை செயல்பட்டு வருகின்றது. பொது மக்கள் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம்.

எனவே பேரிடர் காலங்களில் பொதுமக்களின் பாதுகாப்பையும், அடிப்படைத் தேவைகளையும் உறுதி செய்யும் வகையில் மாவட்ட நிர்வாகம் அனைத்து நிலைகளிலும் தயாராக உள்ளது.'' என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர். சீ சுரேஷ் குமார். இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து நாகப்பட்டினம் நகராட்சி வலிவலம் தேசிகர் பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் முகாமிட்டுள்ள தேசிய பேரிடர் மேலாண்மை குழுவினர் மற்றும் மீட்புப் பணிக்காக கொண்டுவரப்பட்டுள்ள உபகரணங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பார்வையிட்டு அவற்றை பயன்படுத்தும் முறைகள் குறித்து கேட்டறிந்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு,செ.விஜயகுமார்,இ.கா.ப, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.வ.முருகேசன், நாகப்பட்டினம் சார் ஆட்சியர் திரு.கமல் கிஷோர்,இ.ஆ.ப, தேசிய பேரிடர் மேலாண்மைக் குழு துணை கமாண்டன்ட் திரு,பி.வைரவநாதன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மீ.செல்வகுமார், வட்டாட்சியர் திரு.இளங்கோவன், வட்டாட்சியர்(பேரிடர் மேலாண்மை) திரு.தமிமுன் அன்சாரி உட்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்**